1969 மார்ச் 11] [திரு. ஏ. கோவிந்தசாமி]

சித்ரா தியேட்டருக்கு எதிரிலே வசிக்கிறோம் என்று தகவல் கொடுத்தாலும் கூட அந்தப் பகுதிகளுக்கும் அதிகாரிகள் சென்று விசாரணை செய்கிறார்கள். காலை நேரத்தில் விசாரணை செய்கிறார்கள், இரவு நேரத்தில் விசாரணை செய்கிறார்கள், மற்ற நேரங்களிலே அவர்கள் வெளியே போகிறார்கள் என்ற காரணத்தினாலே. பல போலிக் கார்டுகள் இருக்கும்படியான நிலைமை இருக்கிறது. உண்மையாகவே கார்டுக்குரியவர்கள் தொல்லைக்குள்ளானால் அதுபற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டியதுதான். அதே நேரத்திலே பொதுமக்களுக்கு அரிசி கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உண்டாக்குவதற்காக, அரிசிப் பற்றாக்குறை ஏற்படாமலிருப்பதற்குத்தான், அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படக்கூடாது என்ற காரணங்களுக்காகத்தான் இந்த நிலை கையாளப்படுகிறது. சில பேர் அரிசி வாங்கி விற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாலே அதைத் தவிர்க்க அரசு இந்த நிலையைக் கையாளுகிறது. 5 பேர் இருக்கக்கூடிய இடத்திலே 7 பேர் என்று கொடுக்கிறார்கள். சிலபேர் விலாசத்தைக் கொடுப்பது கிடையாது. விசாரணைக்கு அதிகாரி வருவார், அங்கு பெயர் கொடுங்கள் என்றால், விசாரணைக்கு அதிகாரி ஏன் வர வேண்டும், நான் இங்கே வருகிறேன், கார்டு கொடுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் கொடுக்கின்ற தகவலிலுள்ளபடி ஆட்கள் இருக்கிறார்களா என்று அதிகாரிகள் சென்று பார்த்தால், அப்படிப்பட்ட ஆட்களே அங்கே கிடையாது என்ற தகவல் கிடைக்கிறது. இதனாலே சங்கடம் ஏற்பட்டதே தவிர, இதனாலே சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவே தவிர, அவர்கள் டிசம்பர் மாதத்திலேயே இந்த வேலையை ஆரம்பித்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4. நடைமுறைக் கேள்வி

வினாக்களுக்கு விடையளிப்பதில் தாமதம்

* **திரு. எம். சுரேந்திரன்** : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். தமது அவையின் விதிகளிலே, வினாப் பகுதியிலே, 34-வது விதியிலே உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு 22 நாட்களிலே பதில் அளிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அதைவிட அதிகமான நாள் தேவை என்று துறையினர் கேட்டால், சபாநாயகருக்கு எழுதி அனுமதி பெற வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. நேற்று நான் வினாப் பிரிவிலே விசாரித்தபொழுது பல மாதங்களுக்கு முன்னால் அனுப்பப்பட்ட கேள்விகள் எதற்குமே பதில் ஒன்றுகூட வரவில்லையென்று கூறினார்கள். ஆகவே, இந்த விஷயம் குறித்து நான் கேட்பது, அனுமதி கேட்டு கால தாமதம் ஆகியதா ? அனுமதி கேட்காமலேயே காலதாமதம் ஆகியதா ? இது என்னுடைய குறை மட்டுமல்ல, இங்கே உள்ள உறுப்பினர்களுடைய உணர்ச்சிகளை நான் வெளிப்படுத்துகிறேன். ஆகவே, இதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகளுக்கு விடைகள் வரவில்லை என்று சொன்னால் அதை மாண்புமிகு உறுப்பினர்கள் இலாகாவிலே சென்று கேட்பது அவ்வளவு முறையாக இருக்காது. அதைப்பற்றி பேரவைத் தலைவரைக் கேட்டிருக்க வேண்டும். பேரவைத் தலைவர் தன்னாலியன்றவரை உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வினாக்களுக்குரிய விடைகளை மாண்புமிகு அமைச்சர்கள் மூலமாக இலாகாவிலேயிருந்து எவ்வளவு விரைவிலே பெறமுடியுமோ அவ்வளவு விரைவாகப் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இலாகாவாலே குறிப்பிட்ட காலத்தில் விடையைத் தரமுடியாத நேரத்திலே அவ்வப்போது காலத்தை நீட்டித்துத் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுடைய காரணம் நியாயமாக இருந்தால் அந்தந்த நேரங்களிலே அவர்களுக்குரிய காலமும் நீட்டித்துத் தரப்படுகிறது. எவ்வளவு விரைவிலே விடைகளை உறுப்பினர்களுக்கு கொடுக்கமுடியுமோ அவ்வளவு விரைவிலே அவர்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளை நான் செய்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்பு.

காமன்வெல்த் பார்லிமெண்டரி சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையில் பேரவை உறுப்பினர்கள் உறுப்பினராதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு வேண்டுகோள். நம் உறுப்பினர்கள் காமன்வெல்த் நாடாளுமன்ற நிகழ்ச்சிகளில் பெரும் பங்கு கொள்ள அந்த நிறுவனத்தில் உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்று வேண்டப்படுகிறது. அதன் காரணமாக, உறுப்பினர்கள், காமன்வெல்த் பார்லிமெண்டரி அஸோசியேஷன் மாநாடுகள் கூடும் இடங்களில் சென்று பங்கு பெறும் வாய்ப்பு இருக்கும். திரு. ஆசைத்தம்பி அவர்களும், திரு. சௌந்திரராஜ மூப்பனார் அவர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அப்படி மற்ற உறுப்பினர்களும் சென்று வர வேண்டும் என்கிற ஆசை எனக்கு இருக்கிறது. ஆகவே பெருமளவில் அந்தச் நிறுவனத்தின் தமிழ்நாட்டுக் கிளையில் உறுப்பினர்களாகவேண்டும். அதற்கு ஆண்டுச் சந்தா ரூ. 5 தான். ஆயுள் சந்தா ரூ. 50. எல்லோரும் அந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

6. 1969–70-ம் ஆண்டிற்கான நிதி கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 20.—தொழில்கள்

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 20—தொழில்கள்" என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,88,08,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,88,08,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்கிற வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, மூடப்பட்ட ஆலைகளை அரசாங்கமே ஏற்று நடத்துகின்ற கொள்கை பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,88,08,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள நான்கு சர்க்கரை ஆலைகளிலிருந்தும் கிடைக்கும் கரும்புச் சக்கையிலிருந்து கடலூரில் ஓர் காகித தொழிற்சாலை நிறுவுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து விவாதிக்க,

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,88,08,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, வறட்சியான பகுதிகளில், குறிப்பாக கோவில்பட்டி தாலுகாவின் விவசாயிகளுக்கு உப-தொழிலாக சிறு தொழில்கள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று விவாதிக்க,

---

* 217–301-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.